செ.வெ.எண் 542 நாள் 22-8-07

பூகோள குறியீடு சட்டத்தின் கீழ் கைத்தறி ரகங்களை பதிவு செய்தல் குறித்த பத்திரிக்கைக் குறிப்பு

பாரம்பரியமிக்க கைத்தறி துணிகளை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பவானி ஜமக்காளம் மற்றும் மதுரை சுங்குடி சேலைகளை பூகோள குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளது. இதனால் மேற்படி ரகங்கள் வெளிநாட்டு சந்தையில் பாதுகாப்பு பெற்றுள்ளன. உண்மையான துணி வகைகளை இதர சாதாரண துணி ரகங்களிலிருந்து பிரித்தறியும் பொருட்டு மேற்காண் மூன்று ரகங்களுக்கும் ஹோலோகிராம் துறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பூகோள குறியீட்டு பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட குறியீடுகளின்படி உற்பத்தியாகும் ரகங்களுக்கு இந்த ஹோலோகிராம் ஒட்டப்படும். காஞ்சிபுரம் பட்டு சேலைகளுக்கென தயாரிக்கப்பட்ட ஹோலோகிராம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் 15.3.2007 அன்று வெளியிடப்பட்டது.

பூகோள குறியீடு சட்டத்தின் கீழ் மேற்காண் மூன்று ரகங்களுக்கும் தனித்தனியாக ஆய்வு அமைப்பு உருவாக்கப்பட்டது. காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பவானி ஜமக்காளம் தொடர்பாக முதல் ஆய்வுக் கூட்டம் 10.8.2007 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தற்போது இரண்டு ரகங்களிலும் தொழில் நுட்ப ஆய்வு நடைபெற்று வருகிறது. தொழில் நுட்ப ஆய்வு முடிவு பெற்று காஞ்சிபுரம் பட்டு சேலைகள் பூகோள குறியீட்டு பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட குறியீடுகளின்படி உற்பத்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களுக்கு அடுத்த வாரத்தில் ஹோலோகிராம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. பவானி ஜமக்காளத்தை பொறுத்த வரையில் தொழில் நுட்ப ஆய்வினை முடித்து அடுத்த மாதம் ஹோலோகிராம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் உண்மையான துணி வகைகளை நுகர்வோர் அடையாளம் காண்பதுடன் இந்த ரகங்களின் விற்பனையும் அதிகரிக்கும்.

மேலும் ஆரணி பட்டு, சேலம் வெண்பட்டு மற்றும் கோவை கோரா காட்டன் ஆகிய ரகங்களை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்ய துறை தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேற்காண் மூன்று இடங்களிலும் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றதை தொடர்ந்து மூன்று கைத்தறி ரகங்களுக்கும் பூகோள குறியீடு சட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வெளியீடு:- இயக்குநர்
செமதொ
செ-9